## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு - 2017

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2018 நவம்பர் 02 ஆந் திகதி நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கீழேயுள்ள 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2.2 குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் குடியரசின் நிதிக்கூற்றுக்களாகப் பெயரிடப்பட்டிருந்த போதிலும், திரண்ட நிதியத்தின் கொடுக்கல்வாங்களிற்கு மாத்திரம் இந் நிதிக்கூற்றுக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், பொது முயற்சிகள் மற்றும் குடியரசிற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏனைய நிறுவகங்களிற்கு உரித்தான கொடுக்கல்வாங்கல்கள், நிகழ்வுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களுக்கு உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அந்த நிதிக்கூற்றுக்களின் பெயர், 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) அதிகாரச்சட்டத்தின் தேைவப்பாடுகளிற்கும் அந்த நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்திற்கும் பொருந்துவதாக இல்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படி, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டியிருந்த கடன் மீதித் தொகை ரூபா 9,588,101 மில்லியனான போதிலும், தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் விடயங்களின் படி, அக்கடன் மீதி ரூபா 803,555 மில்லியன் தொகையால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள திறைசேரி பிணை முறிகளிற்கு உரித்தான கணக்கீட்டுக் கொள்கை 2016 ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய திறைசேரி முறிகளின் வழங்கலின் போது அவற்றின் தேறிய பெறுமதிக்குப் பதிலாக முகப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படுதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த திறைசேரி பிணை முறிகளின் முகப் பெறுமதி இதுவரை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்காமை காரணமாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிப் பிணைகளின் மீதி ரூபா 433,097 மில்லியன் தொகையால் நிதிக்கூற்றுறக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கை கடப்பாடுகளின் கீழான 08 கடன் உடன்படிக்கைகள் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 330,221 மில்லியன் தொகையான கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. (விபரம் பின்னிணைப்பு 1 இல் காண்பிக்கப்பட்டுள்ளது). அந்த 08 கடன் உடன்படிக்கைகளில் உள்ளடங்கியிருந்த கடன் மீதியில் ரூபா 150,730 மில்லியன் தொகை ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசாங்கத்தினால் பெறப்பட்டிருந்த கடன்களிற்காக செலுத்தவேண்டியிருந்த கடன் மீதியாகும். இது தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2017 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய MPS/SEC/2017/32 ஆம் இலக்க "ஹம்பாந்தோட்டை துறைமுக நிவாரண உடன்படிக்கை" என்ற பெயருடைய அமைச்சரவை விஞ்ஞாபனம் 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் பெறப்பட்டிருந்த கடன்களிற்காக இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன் மீதியினை மீளச்செலுத்தும் பொறுப்பு, அந்த

நிவாரண உடன்படிக்கை அமுலாகும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் விதத்தில் பொதுத் திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்தக் கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அக்கடன் மீதி துறைமுகங்கள் அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிலிருந்தும் அகற்றப்பட்டிருந்தது.

(iii) அந்த 08 கடன் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கடன் மீதிகளிலிருந்து புத்தளம் நிலக்கரி மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 03 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளின் கீழ் பெறப்பட்டிருந்த கடன்களிலிருந்து மீளாய்வாண்டில் மீளச் செலுத்தியிருந்த கடன் தவணைப் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு 30 இல் (வெளிநாட்டுக் கடன் மீதி வெளிப்படுத்தல்) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, நிதிக்கூற்றுக்களிற்கும் அதன் குறிப்புக்களிற்கும் இடையே வெளிநாட்டுக் கடன்கள் மீளச் செலுத்துதல் தொடர்பில் ரூபா 14,386 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(iv) 2017 ஆம் ஆண்டில் தேறப்பட்டிருந்த 65 கடன் உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய ரூபா 40,237 மில்லியன் தொகையான வெளிநாட்டுக் கடன்கள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படி, அரசாங்கத்தினால் பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிற்கு ரூபா 181,368 மில்லியன் உப கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது, நிதிக்கூற்றுக்களில் உப கடன் பெறுமதி ரூபா 7,490 மில்லியன் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு இலக்கம் 20 இன் படி, 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த உப கடன் பெறுமதி ரூபா 25,152 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் இறுதி அறிக்கையின் (Table 33) படி, 2302 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் உப கடனாக ரூபா 19,043 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களிற்கும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் இறுதி அறிக்கைக்கும் (Table 33) இடையே ரூபா 6,109 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(ii) உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய, மீள அறவிடும் அடிப்படையில், கோல்டன் கீ வைப்பாளர்களிற்குச் செலுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு 2302 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 4,990 மில்லியன் மொத்தமான தொகையும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,500 மில்லியன் தொகையுமாக ரூபா 7,490 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன்கள், உப கடன்களாக குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அந்த உப கடன்களைச் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) திறைசேரிப் புத்தகங்களின் படியான தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட மூலதனப் பங்களிப்பை, கணக்காய்விற்கு வழங்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தலுடன் ஒப்பிடுகையில் பின்வருமாறு ரூபா 23,509 மில்லியன் குறைத்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

| விபரம் | 2017 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| ------------------------------ | -------------------------- | ---------------------- | ------------------------- |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மிதி உறுதிப்படுத்தலின் படி | 68,810 | 8,702 | 77,512 |
| திறைசேரிப் புத்தகங்களின் படி | 53,890 | 113 | 54,003 |
| | --------- | ------- | --------- |
| வேறுபாடு | **14,920** | **8,589** | **23,509** |
| | ===== | ==== | ===== |

(ஈ) குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படி, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்கத்தின் பொறுப்புகள் (அரசாங்கக் கடன்களைத் தவிர்த்து) ரூபா 35,340 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களின் படி, ரூபா 53,188 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) பாதுகாப்பு அமைச்சினால் ஆட்கள் அடையாளப்படுத்தல் பொதுச் செயலகத்தை நிர்மாணிப்பதற்காக 04 வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,550 மில்லியன் கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியன்று இன்னும் செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகள் மற்றும் வட்டித் தொகைகள் ரூபா 7,396 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அந்த மீதி நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஓய்வூதியத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் ஊழியர் பணிக்கொடையினைச் செலுத்தவதற்காக 03 அரசாங்க வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியன்று இன்னும் செலுத்தப்பட வேண்டிய ரூபா 45,792 மில்லியன் கடன் மீதி, நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொது நலவாய மாநாட்டிற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 82 வாகனங்களை 2014 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்கையில் ரூபா 400 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அப் பெறுமதி தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 30 இன் கீழ் ரூபா 127,384 மில்லியன் பெறுமதியான எதிர்மறையான மீதி அரசாங்க திணைக்களத்திற்கான செயற்பாட்டுக் கணக்கில் சீராக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் போதியளவு தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 ஆம் ஆண்டிற்கான குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிசாராத சொத்துக்களின் (Non-financial Assets) பெறுமதி ரூபா 814,336 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இருப்பினும், அந்தப் பெறுமதியில் மீள விலைமதிக்கப்பட்ட பெறுமதிகளும் கிரயத்தின் அடிப்படையிலமைந்த பெறுமதிகளும் உள்ளடங்கியிருந்தன. அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 16 இல் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிசாராத சொத்துக்களின் மீதிகளுடன் தொடர்புடைய 77 நிறுவனங்களை தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தியதில் 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளிலுள்ள 01 ஆம் இலக்க குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ‘‘நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கை’’ இன் படியான மீதிகளின் பெறுமதியினை அத்திகதியில் காணப்பட்டவாறான நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்குரிய ஒதுக்கீட்டுக் கணக்குகளிலுள்ள நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையின் 05 சொத்து விடயங்களின் கீழுள்ள பெறுமதி ரூபா 69,935 மில்லியனாகக் காணப்பட்டது. குடியரசின் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 16 இல் குறிப்பிடப்பட்டிருந்த அந்த நிறுவனங்களிற்கு உரித்தான சொத்துக்களின் பெறுமதி ரூபா 260,893 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, ஒதுக்கீட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளைக் காட்டிலும் ரூபா 190,958 மில்லியன் அதிகமாக நிதிக்கூற்றுறக்களின் பெறுமதி காட்டப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்து வகுதி | சொத்து | 2017.12.31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி | 2017.12.31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கின் படி பெறுமதி | நிதிக்கூற்றுக் களில் அதிகரித்துக் காட்டல் |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9151 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 196,818 | 51,031 | 145,787 |
| 9152 | இயந்திரங்களும் உபகரணங்களும் | 6,294 | 4,200 | 2,094 |
| 9153 | காணிகள் | 26,480 | 2,289 | 24,191 |
| 9160 | நடைபெற்றுவரும் வேலை | 6,756 | 1,369 | 5,387 |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | 24,545 | 11,046 | 13,499 |
| | மொத்தம் | 260,893 | 69,935 | 190,958 |

(ii) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்பு இல. 16 இன் கீழுள்ள நிறுவனங்களிலிருந்து, தெரிவுசெய்யப்பட்ட சில நிறுவனங்களிற்குரிய 04 சொத்து வகுதிகளின் கீழுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 77,265 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளிலுள்ள நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையிலுள்ள அந்த சொத்து விடயங்களின் பெறுமதி ரூபா 246,028 மில்லியனாகக் காணப்பட்டது. அதற்கமைய, அந்த நிறுவனங்களினால் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளைக் காட்டிலும் ரூபா 168,763 மில்லியன் குறைவாக நிதிக்கூற்றுறக்களின் பெறுமதி காட்டப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்து வகுதி | சொத்து | 2017.12.31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி | 2017.12.31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கின் படி பெறுமதி | நிதிக்கூற்றுக் களில் குறைத்துக் காட்டல் |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9151 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 9,544 | 47,445 | 37,901 |
| 9152 | இயந்திரங்களும் உபகரணங்களும் | 59,356 | 130,473 | 71,117 |
| 9153 | காணிகள் | 1,699 | 21,098 | 19,399 |
| 9160 | நடைபெற்றுவரும் வேலை | 6,666 | 47,012 | 40,346 |
| | மொத்தம் | **77,265** | **246,028** | **(168,763)** |

## 2.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிகு இணங்கியிராமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ''2006 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான பாதீட்டுப் பற்றாக்குறை, அந்த ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீதத்திற்கு மேற்படாது இருப்பதற்கும் அந்த எல்லையினை அதன்பின்னர் தொடர்ந்து பேணிவருவதற்கு பொறுப்பாகச் செயற்பட்டு அரசாங்கத்தின் கடன் சுமையினைக் குறைப்பதற்கும்'' அரசாங்கத்தினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புமிக்க நிதி முகாமைத்துவ குறிக்கோளாகும் என 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டத்தின் 3 (அ) ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ளது.
இருப்பினும், 2017 மற்றும் முன்னைய ஏழு ஆண்டு கால இறுதியிலுள்ளவாறான பாதீட்டுப் பற்றாக்குறையினை அந்த ஆண்டுகளிற்குரிய மதிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் 5 சதவீத எல்லையை மீறாது பேணிவருவதற்கு முடிந்திருக்கவில்லை. அதற்கமைய, மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்குறை, மதிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் 7.89 சதவீதமானதுடன், உள்ளபடியான பாதீட்டு பற்றாக்குறை, உள்ளபடியான மொத்தத் தேசிய உற்பத்தியின் 5.70 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் பின்னிணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளன.

(ஆ) 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ஏதேனும் ஓராண்டின் இறுதியில் காணப்பட வேண்டிய அரசாங்கத்தின் மொத்தப் பொறுப்பு அந்த ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது. அந்த எல்லைக்கு இணங்கிச் செயற்பட்டதாக நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதி நிலைமைக்கூற்றுக்கு அப்பாற்பட்டு கணக்குகள் வைக்கப்பட்டுள்ள பல்வேறு அரசாங்க முயற்சிகளிற்குரிய பொறுப்புக்களையும் கருத்திற்கொள்கையில் குறித்த எல்லை மீறப்பட்டுள்ளது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பொறுப்புகள் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புகளின் பெறுமதி * |
|---|---|
| | ரூபா மில் |
| வங்கி மேலதிகப் பற்று | 150,539 |
| மத்திய வங்கி முற்பணம் | 199,801 |
| பொதுப் படுகடன் | 9,588,101 |
| நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிராத பொறுப்புகள் : | |
| - ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் | 330,221 |
| - திறைசேரி பிணை முறி மீதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் | 433,097 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **10,701,759** |
| மொத்த தேறிய உற்பத்தி | 13,289,000 |
| மொத்த தேறிய உற்பத்தியின் சதவீதமாக மொத்தப் பொறுப்புக்கள் | 80.53 |

* பொதுத் திறைசேரியின் பிணைகள் மீது பொது முயற்சிகளால் பெறப்பட்டுள்ள கடனிற்காக வங்கிகளிற்கு வழங்கப்பட்டுள்ள பிணைகள் மற்றும் நிவாரண ஆவணங்களின் பெறுமதியான ரூபா 652,214 மில்லியன் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் மேற்குறித்த பொறுப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் செயலாற்றல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படியான நிதிசார் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 2017 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீடு | விபரம் | உள்ளபடியான பெறுமதி 2017 | உள்ளபடியான பெறுமதி 2016 |
|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வருமானம்** | | |
| 308,000.0 | வருமான வரி | 274,561.6 | 258,856.8 |
| 1,052,360.0 | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 1,024,280.5 | 840,563.9 |
| 389,390.0 | சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரி | 371,336.1 | 364,268.1 |
| **1,749,750.0** | வரி வருமானம் | **1,670,178.2** | **1,463,688.8** |
| **163,900.0** | வரியல்லாத வருமானமும் ஏனையவையும் | **174,839.1** | **235,066.3** |
| **1,913,650.0** | வருமானங்களின் மொத்தம் (அ) | **1,845,017.3** | **1,698,755.1** |
| | **கழி: செலவினம்** | | |
| 472,299.7 | சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய சேவை நலன்கள் | 463,872.5 | 452,700.7 |
| 188,833.1 | ஏனைய பொருட்களும் சேவைகளும் | 164,446.0 | 148,955.5 |
| 602,248.7 | உதவுதொகைகள் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 580,556.0 | 557,162.9 |
| 761,152.1 | வட்டிக் கொடுப்பனவு | 735,565.7 | 610,894.6 |
| 2,149.4 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 1,134.8 | 1,168.0 |
| **2,026,683.0** | **மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (ஆ)** | **1,945,575.0** | **1,770,881.7** |

| | | | |
|---|---|---|---|
| **113,033.0** | **வருமானக் குறை (அ) – (ஆ)** | **100,557.7** | **72,126.6** |
| 935,529.4 | **அரச முதலீடுகள்** | 657,530.0 | 594,012.7 |
| **1,048,562.4** | **பாதீட்டுப் பற்றாக்குறை** | **758,087.7** | **666,139.3** |
| | **பாதீட்டு பற்றாக்குறைக்கான நிதியீட்டம்** | | |
| 270,325.0 | வெளிநாட்டுக் கடன் பெறுவனவு | 601,305.6 | 574,248.7 |
| (220,052.2) | வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்தல் | (219,349.6) | (145,119.3) |
| **50,272.8** | **தேறிய வெளிநாட்டு கடன் பெறுவனவு** | **381,956.0** | **429,129.4** |
| 8,000.0 | வெளிநாட்டு மானியங்கள் | 8,031.1 | 7,496.0 |
| **58,272.8** | **மொத்த வெளிநாட்டு நிதியீட்டப் பங்களிப்பு** | **389,987.1** | **436,625.4** |
| 1,829,861.5 | உள்நாட்டு கடன் பெறுவனவு | 856,671.1 | 1,041,541.3 |
| (678,053.5) | உள்நாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் | (648,133.9) | (596,429.3) |
| **1,151,808.0** | **தேறிய உள்நாட்டு கடன் பெறுவனவு** | **208,537.2** | **445,112.0** |
| **1,210,080.8** | வெளிநாட்டு நிதியீட்டப் பங்களிப்பின் மொத்தமும் உள்நாட்டு கடன் பெறுவனவும் | **598,524.3** | **881,737.4** |
| 16,250.0 | கடன் அறவீடு | 16,418.0 | 18,619.5 |
| 100.0 | மூலதனச் சொத்து விற்பனை | 144.1 | 407.2 |
| - | Divestiture Proceeds | 44,677.0 | - |
| - | வைப்புக் கணக்குள் மற்றும் பொறுப்புக்களில் தேறிய மாற்றம் | 113,470.0 | (202,654.9) |
| - | காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் அதிகரிப்பு/ (குறைவு) | (15,145.7) | (31,969.9) |
| **1,226,430.8** | **மொத்த நிதியீட்டத்தின் கூட்டுத்தொகை** | **758,087.7** | **666,139.3** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,698,755 மில்லியன் தொகையான மொத்த வருமானத்தில் 86 சதவீதம் வரி வருமானமும் 14 சதவீதம் வரி அல்லாத வருமானமாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 1,845,017 மில்லியன் தொகையான மொத்த வருமானத்தில் 91 சதவீதம் வரி வருமானமாகவும் 9 சதவீதம் வரி அல்லாத வருமானமாகக் காணப்பட்டது. இதன் படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வரி அல்லாத வருமானம் ரூபா 60,227 மில்லியன் தொகையாக அதாவது 25.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 146,262 மில்லியன் அல்லது 8.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 4 சதவீதமான ரூபா 68,633 மில்லியன் வருமானத்தை சேகரிக்க முடியாது போயிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 174,693 மில்லியன் தொகையால் அதாவது ஏறத்தாழ 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் கடனிற்கான வட்டிக் கொடுப்பனவுகள், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 124,671 மில்லியனால் அதாவது ஏறத்தாழ 20 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. இருப்பினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போதான தேறிய கடன் பெறுதல்கள் ரூபா 283,748 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டின் கடன்களிற்கான வட்டிக் கொடுப்பனவு மொத்த மீண்டெழும் செலவினத்தில் ஏறத்தாழ 38 சதவீதமாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் அது ஏறத்தாழ 34 சதவீதமாக காணப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அரசாங்க முதலீட்டிற்கான ஏற்பாடு ரூபா 63,517 மில்லியனால் அல்லது ஏறத்தாழ 11 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு ரூபா 277,999 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த அந்த நிதி ஏற்பாட்டில் ஏறத்தாழ 30 சதவீத நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பாதீட்டு பற்றாக்குறைக்கு ரூபா 91,948 மில்லியனால் அல்லது 13.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இருப்பினும், தேறிய கடன் பெறுதல்கள் (உள்நாட்டு மற்றுறம் வெளிநாட்டு) ரூபா 283,748 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன், கடன் அறவிடுதல்கள் ரூபா 2,201 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2017 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் பெறுதல்கள், கடன் தவணைப்பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்க வருமானம் என்பன முன்னைய 05 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| ஆண்டின் போது பெறப்பட்ட உள்நாட்டுக் கடன் * | 2,549 | 2,518 | 2,793 | 2,020 | 2,178 | 2,256 |
| ஆண்டின் போது பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் | 601 | 574 | 556 | 423 | 183 | 365 |
| பெறப்பட்ட மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் | **3,150** | **3,092** | **3,349** | **2,443** | **2,361** | **2,621** |
| உள்நாட்டுக் கடன் தவணைப்பணக் கொடுப்பனவு** | 2,340 | 2,073 | 2,265 | 1,584 | 1,696 | 1,980 |
| வெளிநாட்டுக் கடன் தவணைப்பணக் கொடுப்பனவு | 219 | 145 | 187 | 107 | 95 | 153 |
| உள்நாட்டுக் கடனிற்கான வட்டிக் கொடுப்பனவு | 597 | 510 | 450 | 376 | 401 | 351 |
| வெளிநாட்டுக் கடனிற்கான வட்டிக் கொடுப்பனவு | 138 | 101 | 77 | 107 | 95 | 153 |
| **கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் மொத்தம்** | **3,294** | **2,829** | **2,979** | **2,174** | **2,287** | **2,637** |
| **அரசாங்க வருமானம்** | **1,845** | **1,699** | **1,394** | **1,128** | **1,066** | **997** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளிலிருந்து ஒட்டுமொத்த அரசாங்க வருமானத்தை கழித்த பின்னர் இன்னும் செலுத்த வேண்டியுள்ள கடன் தவணை மற்றும் வட்டியின் அளவு | 1,449 | 1,130 | 1,585 | 1,046 | 1,221 | 1,640 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கக் கடன் மீதி*** ** | **9,776** | **8,861** | **7,830** | **6,721** | **6,106** | **5,520** |
| **கடன் தவணைப்பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் :** | சதவீதம் | சதவீதம் | சதவீதம் | சதவீதம் | சதவீதம் | சதவீதம் |
| - கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் சதவீதமாக அரசாங்க வருமானம் | 56.0 | 60.1 | 46.8 | 51.9 | 46.6 | 37.8 |
| - ஆண்டின் போது பெறப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக மொத்தக் கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் | 104.5 | 91.3 | 89.0 | 88.9 | 96.9 | 100.6 |
| - ஒட்டுமொத்த அரசாங்க வருமானத்தின் சதவீதமாக மொத்தக் கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் | 178.5 | 166.4 | 213.7 | 192.6 | 214.5 | 264.5 |

* ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டுக் கடனில் திறைசேரி உண்டியல்கள் விநியோகிக்கப்படுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த நிதியும் உள்ளடங்கியுள்ளது. (இதன்போது திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் பெறப்பட்ட தேறிய கடன் தொகை அகற்றப்பட்டுள்ளது.) உதாரணமாக:

| | **2017** | **2016** |
|---|---|---|
| | **ரூபா பில்லியன்** | **ரூபா பில்லியன்** |
| உள்நாட்டுக் கடன் பெறுதல்கள் | 857 | 1,042 |
| திறைசேரி உண்டியல்களை வழங்கியதன் மூலம் பெறப்பட்ட தேறிய கடன்கள் | 68 | (159) |
| திறைசேரி உண்டியல்களை வழங்கியதன் மூலம் பெறப்பட்ட மொத்தக் கடன்கள் | 1,624 | 1,635 |
| | 2,549 | 2,518 |

**உள்நாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவுகளில் திறைசேரி உண்டியல்களிற்காக ஆண்டின் போது செலுத்திய கொடுப்பனவுகளும் உள்ளடங்குகின்றன. உதாரணமாக:


| | **2017** | **2016** |
|---|---|---|
| | **ரூபா பில்லியன்** | **ரூபா பில்லியன்** |
| உள்நாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல் | 648 | 597 |
| திறைசேரி உண்டியல்களை வழங்கியதன் மூலம் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துதல் | 1,692 | 1,476 |
| | 2,340 | 2,073 |

*** பொதுப்படுகடன் மீதியினை கணிப்பிடுகையில் குத்தகைக் கடன்கொடுத்தோர் நீக்கப்பட்டு மத்திய வங்கி முற்பணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக:


| | 2017 | 2016 |
|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுப்படுகடன் | 9,588 | 8,794 |
| மத்திய வங்கி முற்பணங்கள் | 200 | 83 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | (12) | (16) |
| | 9,776 | 8,861 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலுமான ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய கடன்தவணை மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கு அந்த ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட அரசாங்க வருமானம் போதியதாக இருக்கவில்லை. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மொத்த உள்நாட்டு வருமானம் ரூபா 146,262 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் செலுத்த வேண்டியிருந்த மொத்தக் கடன்தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளில் 56 சதவீதத்தினை மாத்திரம் தீர்ப்பதற்கு மொத்த அரசாங்க வருமானம் போதுமானதாகக் காணப்பட்டது. கடன் தவணைப்பணமும் கடன் வட்டிக் கொடுப்பனவுகளும் அரசாங்க வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு கீழே வரைபில் காணபிக்கப்பட்டுள்ளன.




(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் 2017 இன் இறுதியிலுள்ளவாறன கடன்தவணை மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கு அரசாங்க வருமானம் போதியதாக காணப்படாமையால் அந்தந்த ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டில் கடன்தவணை மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கு அரசாங்க வருமானம் போதியதாக காணப்படாமையால் செலுத்த வேண்டியிருந்த கடன்தவணை மற்றும் வட்டிப் பெறுமதியில் 44 சதவீதமாகிய ரூபா 1,449,990 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்காக பெறப்பட்டிருந்த கடனிற்காக செலுத்தப்பட வேண்டியிருந்தது. முன்னைய ஆண்டில் பெறப்பட்டிருந்த மொத்தக் கடன் தொகையில் 91.3 சதவீதம் அந்த ஆண்டில் செலுத்தவேண்டியிருந்த கடன்தவணை மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கு போதுமானதாக இருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த மொத்தக் கடன் தொகை மீளாய்வாண்டில் செலுத்தவேண்டியிருந்த கடன்தவணை மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. அதாவது, பெறப்பட்டிருந்த மொத்தக் கடன் தொகையுடன் ஒப்பிடுகையில் செலுத்த வேண்டியிருந்த கடன்தவணை மற்றும் வட்டியின் பெறுமதி 106 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் படி, ஆண்டின் இறுதியில் மொத்த பொதுப்படுகடன் மீதி கடந்த ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருந்தது. விபரங்கள் பின்வரும் வரைபில் காணபிக்கப்பட்டுள்ளன.





(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அரசாங்க முதலீட்டிற்கான நிதி ஏற்பாடு ரூபா 63,517 மில்லியன் அல்லது ஏறத்தாழ 11 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு ரூபா 277,999 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த அந்த நிதி ஏற்பாட்டில் ஏறத்தாழ 30 சதவீதமான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 91,948 மில்லியன் அல்லது 13.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இருப்பினும், தேறிய கடன் பெறுதல்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) ரூபா 283,748 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன், கடன்களை அறவிடுதல் ரூபா 2,201 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,776 பில்லியன் தொகையான மொத்த அரசாங்கக் கடன் மீதி ரூபா 13,289 பில்லியன் தொகையான மொத்த தேசிய உற்பத்தியில் 73.5 சதவீதமாகக் காணப்பட்டது. அதன்படி, நீண்ட காலமாக அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களில் குறிப்பிடத்தக்களவு தொகை, கடன் தவணைப்பணம் மற்றும் வட்டிக் மீள்கொடுப்பனவுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்டவாறு அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்காக போதியளவு முதலீட்டை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய 07 ஆண்டுகளிற்குமான உள்நாட்டுக் கடன் பெறுதல் பெறுமதியும் உள்நாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவுகளின் விபரங்களும கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| உள்நாட்டுக் கடன் பெறுவனவுகள் | 2,549 | 2,518 | 2,793 | 2,020 | 2,178 | 2,256 | 1,719 | 1,483 |
| உள்நாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகள் | 2,340 | 2,073 | 2,265 | 1,584 | 1,696 | 1,980 | 1,494 | 1,227 |
| தேறிய உள்நாட்டுக் கடன் பெறுவனவுகள் | 209 | 445 | 528 | 436 | 482 | 276 | 225 | 256 |
| உள்நாட்டுக் கடன் பெறுவனவுகளின் சதவீதமாக உள்நாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகள் | 91.8 | 82.3 | 81.1 | 78.4 | 77.9 | 87.8 | 86.9 | 82.7 |

மேற்குறித்த தகவல்களின் படி, மீளாய்வாண்டின் மொத்த உள்நாட்டுக் கடன் பெறுவனவுகளின் 92 சதவீதம் உள்நாட்டக் கடன்களை மீளச் செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், தேறிய உள்நாட்டக் கடன் பெறுதல்கள், மொத்தக் கடன் பெறுவனவில் 8 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. அதன்படி, உள்நாட்டுக் கடன் பெறுதல்களின் மீதான முதலீட்டின் இயலுமை மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. விபரங்கள் கீழே உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளன.




(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தப் பொதுப்படு கடனை நடுவாண்டுச் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் தனிநபர் கடன் அளவு ரூபா 455,885 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 417,865 ஆகக் காணப்பட்டது. அதன்படி, முன்னைய ஆண்டின் தனிநபர் கடன் அளவுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 38,020 ஆல் அதிகரித்திருந்தது. அவ்வாறே, பொதுப்படுகடன் மீதியில் 45 சதவீதம் வெளிநாட்டுக் கடனாக காணப்பட்டமை மற்றும் ரூபாவின் பெறுமதி தேய்வடைதல் தாக்கம் காணரமாக தனிநபர் கடன் அளவின் உள்ளபடியான பெறுமதி அதனைக் காட்டிலும் கூடிய பெறுமதி கொண்டதாகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் போதான நடுவாண்டு சனத்தொகை மற்றும் தனிநபர் கடன் அளவு என்பன கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுப்படு கடன் மீதி (ரூபா பில்லியன்) | 9,776 | 8,861 | 7,830 | 6,721 | 6,106 | 5,520 |
| நடுவாண்டு சனத்தொகை (‘000) | 21,444 | 21,203 | 20,966 | 20,771 | 20,585 | 20,425 |
| தனிநபர் கடன் அளவு (ரூபா) | 455,885 | 17,865 | 373,462 | 323,576 | 296,624 | 270,257 |

## 3.3 நிதி நிலைமை

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் இறுதியிலுள்ளவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2017 | 2016 (மீளத் தயாரிக்கப் பட்ட) | 2015 | 2014 | 2013 ஒப்பீட்டு எண்ணிக்கை கள்) | 2013* |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லி | ரூபா மில்லி | ரூபா மில்லி | ரூபா மில்லி | ரூபா மில்லி | ரூபா மில்லி |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | **814,336** | **346,655** | **21,287** | - | - | - |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | | | |
| அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் | 27,428 | 23,032 | 22,327 | 23,396 | 23,012 | 23,012 |
| அரச திணைக்களங்களுக்கான முற்பணம் | 15,088 | 16,093 | 9,878 | 9,679 | 9,230 | 9,230 |
| அங்கத்துவக் கட்டணம் | 3,517 | 3,517 | 3,517 | 3,517 | 3,517 | 3,517 |
| கடன் வழங்கல் | 181,368 | 169,547 | 174,196 | 207,966 | 370,618 | 370,618 |
| அரசாங்கத்தின் வசமுள்ள வியாபாரங்களில் அரசின் பங்களிப்பு | 578,481 | 526,907 | 492,130 | 397,837 | 212,976 | 212,976 |
| கடன் பெறுவனவின் மீதான முதலீடு | - | - | 7,684,954 | 6,577,431 | 5,996,496 | - |
| முத்திரை இருப்புக் கணக்கு | 1,305 | 1,275 | 1,315 | 1,244 | 971 | 971 |
| குத்தகை மற்றும் வேலை முற்பணம் | 750 | 229 | - | - | - | - |
| **நிதிச் சொத்துக்களின் கூட்டுத்தொகை** | **807,937** | **740,601** | **8,388,317** | **7,221,072** | **6,616,821** | **620,325** |
| **மொத்த சொத்துக்கள்** | **1,622,273** | **1,087,255** | **8,409,604** | **7,221,072** | **6,616,821** | - |
| **நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்** | | | | | | |
| திரண்ட நிதியம் | (285,571) | (187,247) | (403,026) | (356,665) | (312,477) | - |
| எதிர்பாரா சந்தர்ப்ப நிதியம் | 500 | 500 | 100 | 140 | 140 | 140 |
| வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 31,264 | 23,820 | 25,748 | 25,835 | 22,587 | 22,587 |
| முதலீடுகள் மீதான | - | - | 666,326 | 605,803 | 584,215 | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிதியம் - எஸ்ஓஈஎஸ் | | | | | | |
| நானாவித நிதியம் | 992 | 1,525 | 1,397 | 1,285 | 1,386 | 1,386 |
| நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஒதுக்க நிதியம் | - | - | 21,287 | - | - | - |
| தேறிய சொத்து சீராக்கல் கணக்கு | (8,013,167) | (7,750,621) | - | - | - | - |
| **மொத்த நிதியம்** | **(8,265,982)** | **(7,912,023)** | **311,832** | **276,399** | **295,851** | - |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கி மேலதிகப் பற்று | 150,539 | 165,685 | 197,655 | 164,348 | 137,077 | 137,077 |
| மத்திய வங்கி முற்பணம் | 199,801 | 83,307 | 151,132 | 143,898 | 109,272 | 109,272 |
| அரசின் கடன் பெறுவனவு | 9,588,101 | 8,793,959 | 7,684,954 | 6,577,431 | 5,996,496 | 5,996,496 |
| வைப்புக்களும் ஏனைய பொறுப்புக்களும் | 75,121 | 64,343 | 63,142 | 62,724 | 83,410 | 83,410 |
| அரச திணைக்களங்களுடனான செயற்பாட்டுக் கணக்கு | (125,941) | (108,635) | 277 | (4,315) | (4,905) | (4,905) |
| நானாவிதக் கணக்குகள் | 633 | 619 | 612 | 587 | (380) | (381) |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **9,888,254** | **8,999,278** | **8,097,772** | **6,944,673** | **6,320,970** | **6,344,943** |
| **மொத்த நிதியமும் பொறுப்புக்களும்** | **1,622,273** | **1,087,255** | **8,409,604** | **7,221,072** | **6,616,821** | **6,345,083** |
| **நிதிச் சொத்துக்களிற்கு மேலான பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத நிலைமை நிதியங்களின் கூட்டுத்தொகை** | - | - | - | - | - | **5,724,758** |
| திரண்ட நிதியம் - திரண்ட தேறிய வருமான பற்றாக்குறை | - | - | - | - | - | 312,477 |
| பௌதீக சொத்துக்களின் மொத்த முதலீடு மற்றும் திரண்ட தேறிய வருமான பற்றாக்குறை | - | - | - | - | - | 5,412,281 |
| | | | | | | **5,724,758** |
| எதிர்பாராதவைகளும் கடப்பாடுகளும் | 652,214 | 563,337 | 431,954 | 519,274 | 362,923 | 362,923 |

* 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் வடிவத்தினை மாற்றியமைப்பதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்று

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடியரசின் நிதிக்கூற்றுக்களின் வடிவமைப்பு மீளாய்வாண்டில் மாற்றப்பட்டதன் காரணமாக ''தேறிய சொத்துக் கணக்கு'' என்ற பெயரில் கணக்கொன்று அறிமுகப்படுத்தப்பட்டு பின்வரும் கணக்குகள் அதில் சீராக்கப்பட்டிருந்தன.

| | ரூபா மில்லியன் |
|---|---|
| நிதியல்லாத சொத்துக்கள் | 814,336 |
| கடன் வழங்கல் (உபகடன்) | 181,368 |
| அரசிற்கு உரித்தான தொழில்முயற்சிகளில் அரசின் பங்களிப்பு | 578,481 |
| குத்தகை வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் | 750 |
| | ------------- |
| **மொத்தம்** | **1,574,935** |
| கழிக்க: அரசாங்க கடன் பெறுகை | (9,588,101) |
| | --------------- |
| **தேறிய சொத்து சீராக்கல் கணக்கு** | **(8,013,166)** |
| | ======== |

(ஆ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றின் வடிவம் 2014 ஆம் ஆண்டு முதல் மாற்றப்பட்டிருந்ததுடன், அது மீண்டும் 2017 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி, முன்னைய ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றிலுள்ள ஒப்பீட்டுத் தகவல்கள் 2017 ஆம் ஆண்டின் வடிவத்திற்கு இணையாக சீராக்கப்பட்டிருந்தன.

## 3.4 செயற்பாட்டு மீளாய்வு

### 3.4.1 அரசாங்க வருமானம்

மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு மொத்த வருமானம் ரூபா 1,913,650 மில்லியன் தொகையானதுடன் மொத்த உள்ளபடியான வருமானம் ரூபா 1,845,017 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுறக்களின் 32 ஆவது குறிப்பின் படி ''இலாபப் பகிர்வு'' (Profit Distribution) இன் கீழ் திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பாக ரூபா 14,227 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் அந்த வருமானத்தைச் சேகரிப்பதற்கு பொதுத் திறைசேரி தவறியிருந்தது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுறக்களின் 30 ஆவது குறிப்பின் படி ''இலாபப் பகிர்வு'' (Profit Distribution) இன் கீழ் திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு ரூபா 6,378 மில்லியன் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் பொதுத் திறைசேரிக்கு ஏறத்தாழ ரூபா 5,000 மில்லியன் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டிற்காக பெறப்பட வேண்டிய ரூபா 1,378 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு பொதுத் திறைசேரி தவறியிருந்தது.

(இ) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2014, 2015, மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான முறையே ரூபா 35 மில்லியன், ரூபா 37 மில்லியன் மற்றும் ரூபா 40 மில்லியன் என்ற வகையில் மொத்தமாக ரூபா 112 மில்லியன் வருமான மிகை, நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) ஆம் பிரிவின் பிரகாரம் திரட்டிய நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டிருந்த சில நியதிச்சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்காமை காரணமாக அரசாங்கத்திற்கு உரிய வேளைகளில் கிடைக்க வேண்டிய வரிகள் இழப்பாகியிருந்த அல்லது தாமதங்கள் இடம்பெற்றிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மாளிகை வீட்டு வரி மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி திருத்தச் சட்டத்தினால், இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆடை உற்பத்தி கம்பனிகளால் உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்படும் ஆடைகளில் அலகின் அடிப்படையில் பெறுமதி சேர்வரி, ஆடை அலகொன்றிற்கான வரியின் அளவு ரூபா 25 இலிருந்து ரூபா 75 என திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், அத்திருத்தம் 2016 நவம்பர் 01 முதல் செயல்வலுப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இலங்கை சுங்கத்தினால் அந்த வரியினை அறவிடுதல் 2017 யூன் 14 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வரியினை அறவிடுதல் உரிய பிரகாரம் அமுல்படுப்பட்டிருக்காமையால் 2016 நவம்பர் 01 முதல் 2017 யூன் 14 ஆந் திகதி வரை ரூபா 167 மில்லியன் வருமானம் அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்தது.

(iii) 2017 இன் 7 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணங்கள் (திருத்த) சட்டத்தின் பிரகாரம் 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களிலிருந்து 0.5 சதவீதம் பொருளாதார சேவைக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை சுங்கத்தினால் அக்கட்டணம் 2017 யூன் 17 ஆந் திகதி முதல் அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, பொருளாதார சேவைகள் கட்டணம் உரிய திகதியிலிருந்து அறவிடப்படாமை காரணமாக 2017 ஏப்ரல் 01 முதல் 2017 யூன் 15 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 17,142 வாகனங்களிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 153 மில்லியன் வருமானமொன்று அரசிற்கு இழப்பாகியிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரியிறுப்பாளர்களிடமிருந்து வருமானமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கிடைத்திருந்த ரூபா 2,225 மில்லியன் பெறுமதியான 7,175 காசோலைகள் மதிப்பிழந்திருந்தன. முன்னைய ஆண்டில் ரூபா 1,976 மில்லியன் பெறுமதியான காசோலைகள் மதிப்பிழந்திருந்தன. அதன்படி, முன்னைய ஆண்டினைக் காட்டிலும் ரூபா 249 மில்லியன் பெறுமதியான காசோலைகள் மீளாய்வாண்டில் மதிப்பிழந்திருந்தன.

(ஊ) பல்வேறு வருமான மூலங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை வரிகளை உரிய வேளையில் அறவிட்டுக் கொள்வதற்காக முறையான வழிமுறையொன்று குறித்த வருமானங்களைச் சேகரிக்கின்ற மூன்று பிரதான நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களத்தினால் பின்பற்றப்பட்டிருக்காமை காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு ரூபா 345,339 மில்லியன் வரி வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புதிய கணனி முறைமையினை அறிமுகப்படுத்தவதற்கு முன்னர் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான வரியாண்டிற்காக வரி இறுப்பாளர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வரிகள் உரிய வேளையில் அறவிடப்பட்டிருக்காமை காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வரி வருமானம் ரூபா 323,732 மில்லியனாக இருந்தது. அத்துடன், புதிய கணனி முறைமையின் (RAMIS) மூலம் நிர்வகிக்கப்படுகின்ற வரி வகைககளின் 2016 சனவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குரிய நிலுவை வரி வருமானம் 2018 மார்ச் 29 ஆந் திகதி வரை திணைக்களத்தினால் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை சுங்கத்தினால் அறவிடப்படுகின்ற வருமானங்கள் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி வருமானம் ரூபா 19,484 மில்லியன் ஆகும்.

(iii) மதுவரித் திணைக்களத்தினால் அறவிடப்படுகின்ற வருமானங்கள் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி வருமானம் ரூபா 2,123 மில்லியன் ஆகும்.

(எ) அரசாங்க வருமானங்களைச் சேகரிக்கின்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்களிலுள்ள 2017 ஆம் ஆண்டிற்கான மூல வருமான மதிப்பீடு, திருத்திய மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வருமானச் சேகரிப்பு ஆகியனவற்றை ஒப்பீடு செய்கையில், வருமான எதிர்வுகூறல்கள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன முறையான தர்க்கரீதியான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. வருமானங்களைச் சேகரிக்கின்ற இரண்டு பிரதான நிறுவனங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | **இலங்கை சுங்கம்** |
|---|---|---|
| அங்கீகரித்த வருமானக் குறயீடுகளின் எண்ணிக்கை | 36 | 17 |
| வருமானம் சேகரிக்கப்பட்ட, வருமானக் குறயீடுகளின் எண்ணிக்கை | 26 | 13 |
| மூல வருமான மதிப்பீடு (ரூபா மில்லியன்) | 798,268 | 802,280 |
| திருத்திய வருமான மதிப்பீடு (ரூபா மில்லியன்) | 837,855 | 757,800 |
| உள்ளபடியான வருமானம் (ரூபா மில்லியன்) | 792,351 | 728,271 |
| மூல வருமான மதிப்பீட்டிற்கும் திருத்திய வருமான மதிப்பீட்டிற்கும் இடையிலான வேறுபாடு (ரூபா மில்லியன்) | 39,587 | (44,480) |
| மூல வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு (ரூபா மில்லியன்) | (5,917) | (74,009) |
| திருத்திய வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு (ரூபா மில்லியன்) | (45,504) | (29,529) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 இன் வருமாந்த மதிப்பீட்டின் படி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 26 வருமானக் குறியீடுகளின் கீழ் வருமானங்கள் சேகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அந்த வருமானக் குறயீடுகளிற்காக தயாரிக்கப்பட்டிருந்த மூல வருமான மதிப்பீடுகளின் பெறுமதி ரூபா 39,587 மில்லியனால் அல்லது 4.9 சதவீதத்தினால் வருமானம் அதிகரிக்கப்பட்டு மூல வருமான மதிப்பீடுகள் திருத்தப்பட்டிருந்தன. இருப்பினும், மீளாய்வாண்டில் ரூபா 792,351 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திருத்திய வருமான மதிப்பீடுகளின் பிரகாரம், அறவிடப்பட வேண்டியிருந்த வருமானத்தில் ரூபா 45,504 மில்லியன் அல்லது 5.4 சதவீத வருமானம் குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, மூல வருமான மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த வருமானங்களின் பெறுமதியில் 0.7 சதவீதம் அல்லது ரூபா 5,917 மில்லியன் வருமானம் குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மூல வருமான மதிப்பீடுகளிலுள்ள வருமானங்கள் திருத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றில் தேறிய விளைவுகள் அடையப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி, 13 வருமானக் குறியீடுகளின் கீழான மூல வருமான மதிப்பீடுகளின் மூலம் இலங்கை சுங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த வருமான இலக்கு, திருத்திய வருமான மதிப்பீட்டின் மூலம் ரூபா 44,480 மில்லியன் அல்லது 5.5 சதவீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் ரூபா 728,271 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், அது திருத்திய வருமானத்திற்கு ஒப்பாக ரூபா 29,529 மில்லியன் அல்லது 3.9 சதவீதத்தினால் குறைவாகக் காணப்பட்டது. அவ்வாறே, மூல வருமான மதிப்பீட்டின் படி அறவிடப்பட வேண்டியிருந்த வருமானத்தைக் காட்டிலும் ரூபா 74,009 மில்லியன் அல்லது 9.2 சதவீதத்தினால் வருமானம் குறைவடைந்திருந்தது.

**3.4.2 அரசாங்க செலவினம்**

அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டிற்குரிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான பூரணமான கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்குரியதாகும். 2017 ஆம் ஆண்டிற்கான அரசாங்க செலவினங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடு 2017 இன் 32 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் திருத்திய 2016 இன் 24 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி மீளபய்வாண்டிற்கான வழங்கல் சேவைகள் மற்றும் விசேட சட்டச்சேவை செலவினத்திற்காக ரூபா 3,860,318 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு இருந்தது.

| நிதியளிப்பு | மூலதன நிதி ஏற்பாடு | மீண்டெழும் நிதி ஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | 879,681 | 1,233,229 | 2,112,910 |
| விசேட சட்டச் சேவைக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | 801,402 | 713,798 | 1,515,200 |
| வழங்கல் சேவைக்காக வழங்கப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடு | 53,000 | - | 53,000 |
| விசேட சட்டச் சேவைக்காக வழங்கப்பட்ட மேலதிக நிதி ஏற்பாடு | 99,552 | 79,656 | 179,208 |
| **மொத்தம்** | **1,833,635** | **2,026,683** | **3,860,318** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அரசின் செலவினத்திற்காக ரூபா 3,860,318 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரமான ரூபா 3,898,880 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 38,562 மில்லியன் தொகையான அதாவது 0.98 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 3,470,589 மில்லியன் தொகை மாத்திரம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 389,729 மில்லியன் அதாவது மொத்த நிதி ஏற்பாட்டில் 10 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத்திற்கான மொத்த நிதி ஏற்பாடினைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீண்டெழும் செலவினத்திற்கான வழங்கப்பட்டிருந்த ரூபா 2,026,683 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 1,945,575 மில்லியன் நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 81,108 மில்லியன் நிதி ஏற்பாடு அல்லது வழங்கப்பட்டிருந்த மொத்த மீண்டெழும் செலவின நிதி ஏற்பாட்டில் 4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 55 செலவினத் தலைப்புகளின் கீழ் 140 செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,567 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) மீண்டெழும் செலவினத்திற்கான நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தப்படுத்திய பின்னரான சேமிப்பு, வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புகள் ஏற்பட்டிருந்ததுடன், அவ்வாறு ஏற்பட்டிருந்த சேமிப்புகளின் பெறுமதி ரூபா 23,292 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சேமிப்பு வீச்சு | ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|
| சதவீதம் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 75 இற்கு மேல் 100 இற்கு குறைந்த | 15,814 | 708 | 15,106 |
| 50 இற்கு மேல் 75 இற்கு குறைந்த | 4,400 | 1,283 | 3,117 |
| 25 இற்கு மேல் 50 இற்கு குறைந்த | 14,518 | 9,449 | 5,069 |
| **மொத்தம்** | **34,732** | **11,440** | **23,292** |

(ஆ) மூலதனச் செலவினத்திற்கான மொத்த நிதி ஏற்பாடினைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்புக்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,833,635 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 1,525,013 மில்லியன் நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 308,622 மில்லியன் நிதி ஏற்பாடு அல்லது வழங்கப்பட்டிருந்த மொத்த மூலதனச் செலவின நிதி ஏற்பாட்டில் 16.8 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 91 செலவினத் தலைப்புகளின் கீழ் 337 மூலதனச் செலவின விடயங்களிற்காக ரூபா 54,528 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதிலிருந்து எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்படாமை காரணமாக முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு மொத்த மூலதன நிதி ஏற்பாட்டில் 2.9 சதவீதமாக இருந்தது.

(iii) மூலதனச் செலவினத்திற்கான நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தப்படுத்திய பின்னர், வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புகள் ஏற்பட்டிருந்ததுடன், அவ்வாறு ஏற்பட்டிருந்த சேமிப்புகளின் பெறுமதி ரூபா 187,881 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சேமிப்பு வீச்சு | ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|
| சதவீதம் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 75 இற்கு மேல் 100 இற்கு குறைந்த | 83,071 | 8,814 | 74,257 |
| 50 இற்கு மேல் 75 இற்கு குறைந்த | 102,940 | 40,381 | 62,559 |
| 25 இற்கு மேல் 50 இற்கு குறைந்த | 138,843 | 87,778 | 51,065 |
| மொத்தம் | 324,854 | 136,973 | 187,881 |

### 3.5 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தினை அமுல்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் காரணமாக 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்கவும் போதியளவு தொழில்சார் பொறுப்புடனும் நிதி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது என்பது கணக்காய்வில் உறுதியாகவில்லை.

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியில் வருடாந்த மதிப்பிடப்பட்ட பாதீட்டுப் பற்றாக்குறை மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.64 சதவீதம் முதல் 12.57 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. அக் காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், உள்ளபடியான பாதீட்டுப் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.63 சதவீதம் முதல் 8.61 சதவீதம் வரையிலான வீச்சில் பேணுவதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது (பின்னிணைப்பு 02). இருப்பினும், மதிப்பிடப்பட்ட மூலதன நிதி ஏற்பாட்டினைக் காட்டிலும், குறைவாக மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஒட்டுமொத்தச் செலவினத்தில் குறைவு ஏற்பட்டு ஒட்டுமொத்த பாதீட்டுப் பற்றாக்குறை குறைவடைந்திருந்தது. அதன்படி, வருடாந்த பாதீட்டுப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் பாதீட்டுப் பிரேரணைகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்த குறிக்கோள்களை அடைவதற்கு முடியாது போயிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியில் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்கையில் மதிப்பிடப்பட்ட பெறுமதி, சில ஆண்டுகளில் கூடுதலாகவும் இன்னும் சில ஆண்டுகளில் குறைவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது (பின்னிணைப்பு 03). அந்த நிதியீட்டப் பெறுமதியினை கணிப்பிடுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்த விடயங்கள் அல்லது அந்த விடயங்கள் கணிப்பிடப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியிலுள்ள ஒவ்வோர் ஆண்டிற்குமாக ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் ஊடாக பாராளுமன்றத்தினால் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கடன் எல்லை குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கடன் எல்லைகள் அந்தந்த ஆண்டிற்கான பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை (பின்னிணைப்பு 04). நிதி அமைச்சினால் கடன் பெறுதல் பெறுமதியானது பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்குப் போதுமானது எனக் குறிப்பிடப்பட்டிருக்காமைக்குரிய காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியில் வருடாந்த பாதீட்டுப் பற்றாக்குறையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டு நிதியீட்டம் செய்யும் வழிகளின் பிரகாரம் வெவ்வேறாகக் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், சில ஆண்டுகளில் உள்ளபடியாக வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக்கொள்கையில் மதிப்பிடப்பட்ட

எல்லைகள் தொடர்பில் கவனம் செலுத்தாது எல்லைகளை மீறி கடன்கள் பெறப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்பட்டிருந்தன. (பின்னிணைப்பு 05)
அத்துடன், மேலே குறிப்பிடப்பட்டவாறு நிதியீட்டல் பெறுமதிகளை உள்நாடு மற்றும் வெளிநாடு என்ற ரீதியில் மதிப்பிடுகையில், அதற்காக பய்னபடுத்தப்படுகின்ற அடிப்படைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு நிலைமைகளை அடைய முடியாத சந்தர்ப்பங்களில் மாற்று வழிகளில் ஈடுபட்டுகையில் (உள்நாட்டுக் கடன்களிற்குப் பதிலாக வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்தல்) பொருளாதாரத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பில் முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சில அரசாங்க முயற்சிகளிற்குரிய பொறுப்புக்கள் குடியரசினது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமைக்கும் அந்த அரசாங்க முயற்சிகளின் இன்னும் சில பொறுப்புக்கள் குடியரசினது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமைக்கும் பின்னணியாக அமைந்திருந்த உறுதியான அடிப்படைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அந்த நடைமுறையானது மாற்றுவழி ஊடாக பொறுப்பு எல்லையில் நின்று செயற்படுவதற்குக் கடைப்பிடிக்கப்படும் உபாயம் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த நடைமுறை தொடர்ந்தும் செயற்படுத்தப்படின் அரசாங்க பொறுப்புக்களை செயற்கையாக கட்டுப்படுத்துகின்ற இடர் ஏற்படும் என்பது அவதானிக்கப்பட்டது.

பின்னிணைப்பு 01

**குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத வெளிநாட்டுக் கடன்கள்**

| கடன் இல. | சேயற்திட்டத்தின் பெயர் | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| 2005045 | Puttalam Coal Power Project – Phase i | 29,042,412,000 |
| 2006045 | Puttalam Coal Power Project | 17,538,073,769 |
| 2007044 | Hambantota Port Development Project – Phase i | 29,835,688,812 |
| 2009027 | Puttalam Coal Power Project – Phase ii | 108,954,901,440 |
| 2010006 | Mattala Rajapaksha International Airport Project | 23,955,222,334 |
| 2012033 | Hambantota Port Development Project – Phase ii | 91,712,880,000 |
| 2013014 | Hambantota Port Development Project – Phase i | 20,232,225,232 |
| 2012032 | Hambantota Port Development Project – Phase ii | 8,949,698,338 |
| | **மொத்தம்** | **330,221,101,925** |

## பின்னிணைப்பு 02

**மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பாதீட்டுப் பற்றாக்குறை**

---

| விபரம் | 2017 | | 2016 | | 2015 | | 2014 | | 2013 | | 2012 | | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான |
| ஆரசாங்க வருமானம் (ரூபா பில்லியன்) | 1,914 | 1,845 | 1,971 | 1,771 | 1,441 | 1,394 | 1,331 | 1,128 | 1,192 | 1,066 | 1,038 | 997 | 933 | 943 | 821 | 826 |
| பாதீட்டுப் பற்றாக்குறை (ரூபா பில்லியன்) | 1,049 | 758 | 1,488 | 666 | 1,171 | 963 | 777 | 838 | 663 | 643 | 650 | 593 | 563 | 476 | 548 | 473 |
| மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா பில்லியன்) | 13,289 | | 11,839 | | 11,183 | | 9,785 | | 8,674 | | 7,582 | | 6,543 | | 5,602 | |
| மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பாதீட்டுப் பற்றாக்குறை | 7.89 | 5.70 | 12.57 | 5.63 | 10.47 | 8.61 | 7.94 | 8.56 | 7.64 | 7.41 | 8.57 | 7.82 | 8.60 | 7.27 | 9.78 | 8.44 |

பின்னிணைப்பு 03

**பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியிடுதல் (ரூபா பில்லியன்)**

| விபரம் | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட பாதீட்டுப் பற்றாக்குறை | 1,049 | 1,488 | 1,171 | 777 | 663 | 650 | 563 | 548 |
| மதிப்பிடப்பட்ட மொத்த நிதியீட்டம் | 1,226 | 1,724 | 1,192 | 1,005 | 615 | 620 | 548 | 472 |
| வேறுபா – அதிகரித்தல்/(குறைதல்) | 177 | 236 | 21 | 228 | (48) | (30) | (15) | (76) |

பின்னிணைப்பு 04

**மதிப்பிடப்பட்ட வருடாந்த கடன் பெறுவனவும் அங்கீகரித்த கடன் எல்லையும் (ரூபா பில்லியன்)**

| விபரம் | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|
| குடியரசின் கணக்குகளின் படி மதிப்பிடப்பட்ட வருடாந்த கடன் பெறுவனவு | 2,100 | 2,438 | 2,023 | 1,635 | 1,324 | 1,188 | 1,062 | 901 |
| ஒதுக்கீட்டுச் சட்டத்தின் படி வருடாந்தக் கடன் பெறுவனவு எல்லை | 1,629 | 1,699 | 1,780 | 1,278 | 1,303 | 1,139 | 997 | 980 |
| வேறுபாடு – எல்லை மீறி/(குறைத்து) மதிப்பீடு தயாரித்தல் | 471 | 739 | 243 | 357 | 21 | 49 | 65 | (79) |

பின்னிணைப்பு 04

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன் பெறுதல்கள் (ரூபா பில்லியன்)**

---

| விபரம் | 2017 | | 2016 | | 2015 | | 2014 | | 2013 | | 2012 | | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான |
| வெளிநாட்டுக் கடன் பெறுவனவு | 270 | 601 | 300 | 574 | 321 | 556 | 646 | 423 | 213 | 183 | 242 | 366 | 199 | 287 | 148 | 262 |
| உள்நாட்டுக் கடன் பெறுவனவு | 1,830 | 857 | 2,138 | 1,042 | 1,702 | 1,187 | 989 | 965 | 1,111 | 1,090 | 947 | 726 | 863 | 695 | 753 | 640 |